# பிரிவு 3 - வயது 11 முதல் 13 வரை

பாடல் : 1

தலம்: திருப்பறியலூர் வீரட்டம் | திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : மேகராகக்குறிஞ்சி | தாளம் : இரட்டைகலை ஆதி

கருத்தன் கடவுள் கனல் ஏந்தி ஆடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்தம் உடையார் திருப்பறி யலூரில்
விருத்தன் எனத்தகும் வீரட்டத் தானே. 1.134.1

பாடலின் பொருள்:

திருந்திய மனமுடையவர்கள் வாழும் திருப்பறியலூரில் தொன்மையானவனாய் விளங்கும் வீரட்டானத்து இறைவன் அனைத்துலகங்களுக்கும் தலைவனும், கடவுளுமாக இருப்பவன். கையில் கனலேந்தி நடனம் புரிபவன். சடைமுடி மீது இளம்பிறை அணிந்தவன்.

பாடல் : 2

தலம்: திருக்கொள்ளம்புதூர் | திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : காந்தாரபஞ்சமம் | தாளம் : ஆதி

கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை உள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறு அருள் நம்பனே. 3.6.1

ஓடம் வந்தணையும் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை உள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறு அருள் நம்பனே. 3.6.6

(குறிப்பு : இரண்டு பாடல்களையும் ஒரு பாடலைப் போல் சேர்த்துப் பாட வேண்டும்)

பாடல்களின் பொருள்:

நல்லமணம் கமழும் திருக்கொள்ளம்பூதூர் என்னும் திருத்தலத்தில் திருநடனமாடும் இறைவனைச் சிந்திக்க, இந்த ஓடமானது ஆற்றைக் கடந்து செல்வதாக. எம் நம்பிக்கைக்கும் , விருப்பத்திற்குமுரிய சிவபெரு மானே ! மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் உன் திருக்கோயிலில் உன்னைக் கண்டு வணங்க அருள்புரிவாயாக . 3.6.1

திருநடனம் செய்யும் தலைவனான சிவபெரு மானைத் தியானிக்க ஓடமானது திருக்கொள்ளம்பூதூர் என்னும் தலத்தினை அடையும்படி ஆற்றைக் கடக்கத் தானாகவே தள்ளப் படுவதாக!நம்பனே . மனத்தால் உன்னைச் சிந்தித்து மகிழும் அடியவர்கள் புறத்தேயும் உன்னைத் திருக்கோயிலில் கண்டு வழிபட அருள்புரிவாயாக. 3.6.6

<u>பாடல் : 3</u>

தலம்: பொது — திருநாவுக்கரசு நாயனார் அருளியது

பண் : பழம் பஞ்சுரம் — தாளம் : ஆதி

பற்றற்றார்சேர் பழம்பதியைப் பாசூர் நிலாய பவளத்தைச்
சிற்றம்பலத்து எம் திகழ்கனியைத் தீண்டற்கு அரிய திருவுருவை
வெற்றி ஊரில் விரிசுடரை விமலர் கோனைத் திரைசூழ்ந்த
ஒற்றி ஊர் எம் உத்தமனை உள்ளத்து உள்ளே வைத்தேனே. 4.15.1

பாடலின் பொருள்:

உலகப் பற்று நீங்கியவர்வந்து சேரும் பழைய திருத்தலங்களில் எழுந்தருளி இருப்பவன், பாசூரில் உறையும் பவளம் , சிற்றம்பலத்தில் உள்ள கனி , தீண்டுதலுக்கு அரிய திருஉருவம் , ஒற்றியூரில் விரிந்த ஒளி , தூயவர்கள் தலைவன் , கடல் ஒருபுறம் சூழ்ந்த ஒற்றியூர் உத்தமன் ஆகிய பெருமானை அடியேன் உள்ளத்தில் நிலையாக இருத்தினேன் .

<u>பாடல் : 4</u>

தலம்: திருக்கழுக்குன்றம் — நம்பி ஆரூரர் அருளியது

பண் : நட்டபாடை — தாளம் : எழுமை சாய்ப்பு

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழுந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையும் தண்கழுக் குன்றமே. 7.81.3

பாடலின் விளக்கம்:

உலகீர், நம்மைத் துன்புறுத்தும் நம் வினைகள் குறைந்து, முழுதும் ஒழிதற்பொருட்டு, தோள்கள் எட்டினையும் உடைய சிவபெருமான் அருள் செய்பவன். சிறந்த மாணிக்கம்போலும் ஒளியை யுடையவன். நஞ்சணிந்த கண்டத்தை உடையவன். குளிர்ந்த திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியிருக்கின்றான். அப்பெருமானை நாள்தோறும், முறைப்படி, முறையாக நின்று வழிபடுவோம்.

பாடல் : 5

திருவெம்பாவை — திருவாதவூரடிகள் அருளியது

இராகம் : மோகனம் — தாளம் : ஆதி

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம் தோழி பரிசேலோர் எம்பாவாய். 8.7.1

பாடலின் பொருள்:

மகாதேவனுடைய திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்தொலி கேட்டு எங்கள் தோழி ஒருத்தி உருகி அழுது, தன்னை மறந்து மலர் நிறைந்த படுக்கையின் மீது நின்று புரண்டு விழுந்து கிடந்தாள். ஒளி பொருந்திய நீண்ட கண்களை உடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத அரும் பெருஞ்சோதியென விளங்கும் இறைவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும், உறங்குகின்றாயோ? உன் காது ஓசை புகாத வலிய காதோ? இதுவோ என் தோழியின் தன்மை?